1989 ஏப்ரல் 25]

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நவீன சமையல்கூடம்.

125. —(*வினா எண் 156)— **திரு. க. ரமணி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நவீன சமையல் கூடம் கட்டும் பணி தாமதமாவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனை விரைந்து கட்டி முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) நவீன சமையற்கூடத்தை விரைவாகக் கட்டி முடிக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கேட்டதன் நோக்கமே இந்த புதிய சமையல கூடத்தைக் கட்டி முடிப்பதற்கு 10 இலட்சம் ரூபாய் மதிப்பீடு போட்டு அரசு 'சாங்ஷன்' பண்ணி இரண்டு ஆண்டுகளுக்கு மேல் காலதாமதமாகியும் அந்தக் கட்டட வேலையை செய்து முடிக்க நடவடிக்கை எடுக்கவில்லை. இது ஒரு ஆஸ்பத்திரிக்குள் நடக்கிறது. இந்த நிலையை அனுமதிக்க முடியாது என்ற உணர்வோடு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதன்மீது துரித நடவடிக்கை எடுக்க ஏதாவது யோசனை கொண்டிருக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நவீன சமையல் கூடம் கட்டும் பணி தொடர்ந்து நடந்துக்கொண்டிருக்கிறது. இன்றுள்ள செய்திப்படி கூரை வரை கட்டி முடிக்கப்பட்டு, கூரை போடுவதற்கு தளம் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அங்கே சமையல் கூடம் கட்டி, தேவையான பாத்திரங்கள் வாங்குவதற்கு 2.85 இலட்சம் ரூபாயும் மரச் சாமான்கள் வாங்குவதற்கு 0.10 இலட்சம் ரூபாயும் சிறு கட்டுமானப் பணிகளுக்காக 1.5 இலட்சம் ரூபாயும் வழங்க செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது. சமையல் கூடத்திற்கு கட்டடப் பணியை ஜூன் மாதத்திற்குள் முடிக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே கேட்ட கேள்விக்கு இன்னும் சரியான விடை வரவில்லை. ஒரு ஆஸ்பத்திரிக்குள் கட்டப்பட வேண்டிய கட்டிடம் கட்டுவதிலே இவ்வளவு காலதாமதம் ஏற்படுவது தேவைதானா ? அங்கே 1500-க்கு மேற்பட்ட ‘ இன் பேஷன்ட்ஸ் ’ படுத்துக்கொண்டிருக்கிற ஆஸ்பத்திரியில் துரிதமாகக் கட்ட வேண்டிய கட்டடத்தைக் கட்டாமல் வருஷக்கணக்கில் நீட்டிக்கொண்டு போவது, பொதுப்பணித் துறை கட்டுமானப் பணியில் கவனம் செலுத்தாமல் இருப்பதும ஏனோ தானோ என்று நடவடிக்கையும் தானே காரணம். அந்தக் கட்டுமானப் பணியைத் துரிதப்படுத்தி, ஆஸ்பத்திரி என்ற முறையில் எமர்ஜென்சி கண்ணோட்டத்தோடு பார்த்து செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்மிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான பதிலை நேற்று கூட வினா நேரத்தில் குறிப்பிட்டிருக்கிறேன். இதுபோன்ற பல்வேறு புகார்கள் கடந்த காலத்தில் வந்திருக்கின்றன. இந்தக் கட்டடப்பணி தொடங்கப்பட்டு விரைவாக வேலை நடக்கவில்லை என்று புகார் வந்திருக்கிறது. நானும் பொதுப்பணித் துறை அமைச்சருடன் கலந்து பேசி, இந்தப் பணியை விரைவில் முடிக்க வேண்டுமென்று முடிவு செய்து, இதைப்போன்று ஒவ்வொரு மருத்துவமனைக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. இந்தப் பணியை விரைவாக முடிப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். விரைவாக முடிக்க தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும். இந்த அரசு பொறுப்பேற்ற பின்னால் இப்படிப்பட்ட பணிகளை விரைவாக முடிக்க வேண்டுமென்று நோக்கத்தோடு, ஆங்காங்கே சென்று, நேரில் பேசி, நேரடியாகக் குறிப்புகளைப் பெற்று, இந்த அரசு தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய மின் திட்டங்கள்.

126—(*வினா எண் 38)—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மின் உற்பத்தியைப் பெருக்குவதற்குப் புதிய திட்டங்கள் எவையேனும் அரசின் பரிசீலனையில் உள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் விரம் என்ன ?